

நாகை மாவட்டம் வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் ஆயக்காரன்புலம்3 ஊராட்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை மாணவியர் விடுதியினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சக் கழகத்தலைவர் என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் உதயம் வே.முருகையன், என்.சதாசிவம், மகா.குமார், வேதாரண்யம் நகரக் கழகச் செயலாளர் மா.மீ.புகழேந்தி மற்றும் பலர் உள்ளனர்.



நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம், நாச்சிப்பட்டி, ஓ.சௌதாபுரம், பழந்தின்னிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ரூ.66.24 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 புதிய கட்டடங்கள் திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு, வெண்ணந்தூர் ஒன்றியத்தில், ஓ.சௌதாபுரம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.எம்.துரைசாமி மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஏ.ஆர்.துரைசாமி, பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.எஸ்.எஸ்.ராஜேஷ் கே. கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.வடிவேல், ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் 1,352 பயனாளிகளுக்கு

# கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் பணி ஆணைகள் - ரூ.98.50 லட்சத்தில் முடிவுற்ற பணிகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்து பேச்சு!



திண்டுக்கல், ஆக.12 -

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்துார், குஜிலி யம்பாறை, வடமதுரை, சாணார்பட்டி மற்றும் நத்தம் ஆகிய ஊராட்சி ஒன்றிய பகுதிகளைச் சேர்ந்த 1352 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் பணி ஆணைகளை வழங்கி, ரூ.98.50 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, தமிழகத்தை குடிசை இல்லா மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது, என அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வேடசந்துார், குஜிலியம்பாறை, வடமதுரை, சாணார்பட்டி மற்றும் நத்தம் ஆகிய ஊராட்சி ஒன்றிய பகுதிகளைச் சேர்ந்த 1352 பயனாளிகளுக்கு பணி ஆணைகளை அமைச்சர் சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி, தலைமையில், வேடசந்துார் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் முன்னிலையில் நேற்று (10.08.2024) வழங்கி, ரூ.98.50 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இவ்விழாவில், அமைச்சர் அர.சக்கரபாணி, தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எல்லோருக்கும் எல்லாம், என்ற வகையில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார். கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை அறிவித்து, தொடங்கி வைத்துள்ளார்.

தமிழகத்தை குடிசை இல்லா மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில், வீடு இல்லாத ஏழை, எளிய மக்கள் பாதுகாப்புடன் வசிக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு, தமிழக அரசு சார்பில் இலவச வீடுகள் கட்டி வழங்குவதற்காக “கலைஞரின் கனவு இல்லம்“ திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 2024-25-ஆம் ஆண்டில் ஒரு லட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு வீடும் தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன.

மேலும், ஒரு பயனாளி வீடு கட்டுவது என்பது அவரது எதிர்காலத்திற்காக வாழ்நாளில் ஒருமுறை மேற்கொள்ளும் பணியாகும். இப்பயனாளிக்கு தகுதியிருப்பின் மகளிர் சுய உதவிக்குழு மூலம் ரூ.50,000 அல்லது கூட்டுறவு வங்கிகளில் குறைவான வட்டியில் ரூ.1.00 இலட்சம் வரை கடன் வழங்கப்படும். மேலும், வீடு கட்டுவதற்கு தேவையான பொருட்களை குறைந்த விலையில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தொகுப்பு வீடுகள் திட்டத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளை பழுது பார்க்க ரூ.2,000 கோடி நிதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள்.

“கலைஞரின் கனவு இல்லம்“ திட்டத்தில், தி ண்டுக்கல் மாவட்டத்தில் 08.07.2024 முதல் 02.08.2024 வரை பல்வேறு கட்டங்களாக நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 307 வீடுகள், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் 937 வீடுகள், பழனி ஊராட்சி ஒன்றியத்தில் 306 வீடுகள், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் 824 வீடுகள், சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 433 வீடுகள், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 732 வீடுகள், வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் 165 வீடுகள், வேடசந்துார் ஊராட்சி ஒன்றியத்தில் 200 வீடுகள் என மொத்தம் 5891 வீடுகளுக்கு ஏற்கனவே நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளன.

தற்போது, ஏற்கனவே பெறப்பட்ட விண்ணப்பங்களின்படி, தகுதியுள்ள பயனாளிகள் கண்டறியப்பட்டு, தேர்வு செய்யப்பட்டு, புதிய வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்படவுள்ளது. அதன்படி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் 132 வீடுகள், பழனி ஊராட்சி ஒன்றியத்தில் 93 வீடுகள், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் 9 வீடுகள், வேடசந்துார் ஊராட்சி ஒன்றியத்தில் 60 வீடுகள், என மொத்தம் 437 பயனாளிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்படவுள்ளது.

ஆக மொத்தம் “கலைஞரின் கனவு இல்லம்“ திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் 6,328 வீடுகள் கட்டப்படவுள்ளன.

இன்றையதினம், வேடசந்துார் ஊராட்சி ஒன்றியத்தில் 241 வீடுகள், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் 343 வீடுகள், வடமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் 165 வீடுகள், சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 433 வீடுகள், நத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் 170 வீடுகள் என மொத்தம் 1352 வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வேடசந்துார் சட்டமன்ற தொகுதியில் கடந்த 3 ஆண்டுகளில் சாலைவசதி, குடிநீர் வசதி, கல்வி, சுகாதாரம் என ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கரூர் மாவட்டத்தில் காவிரி மற்றும் அமராவதி ஆறுகள் இணைகின்ற இடத்தில் உபரியாக வெளியேறும் தண்ணீரை, நீரேற்றம் செய்து குழாய்கள் மூலம் கரூர் மாவட்டத்தில் கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் வேடசந்துார், ஆத்துார், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், நத்தம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு கொண்டு வருவதற்கான திட்டம் குறித்து ஆய்வு மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதன்படி, இத்திட்டம் தொடர்பாக ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வு முடிந்து அறிக்கை வந்தவுடன், திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எல்லா குளங்கள் மற்றும் ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

நமது பகுதி வறட்சியான பகுதி. “மரத்தை வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும்“ என்று கலைஞர் கூறியுள்ளார்கள். எனவே, அனைவரும் மரம் வளர்ப்பதில் முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறம்பாடி, புதுக்கோட்டை, கோவில்பட்டி, பூடலூார், சுக்காம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் மரக்கன்றுகள் நடவு செய்து நல்ல முறையில் வளர்க்கப்பட்டுள்ளன. இது பாராட்டுக்குரிய செயல்பாடாகும். எல்லோரும் மரங்கள் வளர்க்க வேண்டும்.

வேடசந்துார் மற்றும் நத்தம் பேரூராட்சிகளை, நகராட்சியாக மாற்றுவதற்கான கோரிக்கைகள் வந்துள்ளன. அதுதொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் 1.16 கோடி மகளிர் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் தகுதியுள்ள பயனாளிகள் அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல், அரசு நகரப் பேருந்துகளில் மகளில் இலவச பயணம் மேற்கொள்ள விடியல் பயணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் பெண்களின் பயணச்செலவு குறைக்கப்பட்டு, சேமிப்பு ஏற்படுகிறது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 20.70 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

பெண்களின் பாதுகாப்பிற்காகவும், பெண்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் ‘புதுமைப்பெண்’ திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் மாணவர்களும் பயன்பெறும் வகையில் அரசு பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி(தமிழ்வழி கல்வி) படித்த மாணவர்கள் உயர் கல்வி படித்தால் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோவையில் தொடங்கி வைத்தார்கள்.

விபத்தில் சிக்கி காயமடைந்தவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கான சிகிச்சை செலவை அரசே ஏற்கும் வகையில் இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தில் ரூ.2.00 வரையிலான மருத்துவ செலவை அரசே ஏற்கும்.

விவசாயப்பணிகளை மேம்படுத்துவதற்காக 2 இலட்சம் இலவச மின் இணைப்புகள் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மாணவ, மாணவிகளின் கல்வி முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இந்த ஆண்டு கல்வித்துறைக்கு ரூ.44,044 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். வேடசந்துாரில் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் ரூ.2.00 கோடி மதிப்பீட்டிலும், பெண்கள் அரசு மேல்நிலைப்பள்ளியில் 4 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், காளாஞ்சிபட்டியில் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நூற்றாண்டு ஒருங்கிணைந்த போட்டித் தேர்வு பயிற்சி மையம் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

வேடசந்துார், வடமதுரை, ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க ரூ.500 கோடி மதிப்பீட்டில் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. குஜிலியம்பாறை, நத்தம், சாணார்பட்டிக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் வரவுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அவருக்கு வருகின்ற காலத்தில் பொதுமக்கள் என்றென்றும் ஆதரவு அளிக்க வேண்டும், இவ்வாறு அமைச்சர் சக்கரபாணி தெரிவித்தார்.

15வது நிதிக்குழு மானியம் 2022-2023 நிதியி லிருந்து கொசவப்பட்டியில் ரூ.57.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த பொதுசுகாதார மையம், அஞ்சுக்குழிப்பட்டியில் ரூ.41.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையம் என மொத்தம் ரூ.98.50 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணி களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர் சக்கரபாணி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல், பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் சௌடீஸ்வரி கோவிந்தன், தனலட்சுமி பழனிச்சாமி, சு.சீனிவாசன், பழனியம்மாள், ஊராட்சி ஒன்றியக் குழு துணைத்தலைவர்கள் தேவசகாயம், தனலட்சுமி கண்ணன், மணிமேகலை, ராமராஜ், பேரூராட்சித் தலைவர்கள் மேகலா கார்த்திகேயன், நிருபாராணி, சேக் சிக்கந்தர் பாட்சா, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் விஜயன், சிவக்குமார், பேரூராட்சி துணைத்தலைவர்கள் சாகுல்ஹமீது, மலைச்சாமி, மகேஸ்வரி, ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மல்லிகா, ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் சேகர், கந்தசாமி என்ற கண்ணன், வட்டாட்சியர்கள் சரவணன், தமிழ்ச்செல்வி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணன், நளினி, மதியழகன், அரசுத் துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## அரியலூர் மாவட்டத்தில்

# மாணவர்களுக்கு ரூ.1000/- உதவித் தொகை வழங்கும் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஆக,11

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில் உயர்கல்வி பயிலும் அரசுப் பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி (தமிழ்வழி) மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் “தமிழ்ப் புதல்வன் திட்டத்தை” தொடங்கி வைத்ததை தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் துவக்கி வைத்து, மாணவர்களுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு வறுமை, ஒரு தடையாக இருக்கக்கூடாது என்று 2022 ஆம் ஆண்டு அரசு பள்ளி மாணவிகள் பயன்பெறும் வகையில் மாதம் ரூபாய் 1000 உதவித் தொகை வழங்கும் புதுமை பெண் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு அரியலூர் மாவட்டத்தில் 25 கல்லூரிகளில் பயிலும் 2147 மாணவிகள் பயனடைந்து உள்ளனர். அதன் தொடர்ச்சியாக அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் தமிழ் வழி பயின்று உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, ரூபாய் 1000 வழங்கும் “தமிழ்ப் புதல்வன்” திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூர் அரசு கலைக்கல்லூரி துவங்கி வைத்ததை தொடர்ந்து, அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து மாணவர்களுக்கு வங்கிப் பற்று அட்டைகளை வழங்கினார்.

இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் சுமார் மூன்று லட்ச மாணவர்கள் பயன் பெறும் நிலையில் அரியலூர் மாவட்டத்தில் 20 கல்லூரிகளில் பயிலும் 2704 மாணவர்கள் பயன்பெறுகின்றனர். இத்தகைய முன்னோடித் திட்டங்களின் மூலம் நமது இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி அவர்கள் நமது மாநிலம் மற்றும் நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழ்வார்கள். மேலும், மாணவர்கள் உயர் கல்வி இலக்கினை அடையவும், எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகளைப் பெற்றிடவும் இயலும்.

அதன்படி கலை மற்றும் அறிவியல், தொழிற்சார் படிப்புகள். இணை மருத்துவம் சார்ந்த படிப்புகள். பட்டயப் படிப்பு. தொழிற்கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்பு (முதல் 3 ஆண்டுகளுக்கு மட்டும்) போன்ற உயர்கல்வி படிப்புகள் படிக்கும் மாணவர்கள் இத்திட்டத்தின் மூலும் பயன்பெறலாம். மேலும், எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு முடித்து. தொழிற்பயிற்சி பயில்வோரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம.ச.கலைவாணி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத்திட்ட இயக்குநர் கவிதா, அரியலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. முத்துகிருஷ்ணன், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட சமூக நல அலுவலர் அனுராப்பூ நடராஜமணி, முன்னோடி வங்கி மேலாளர் திரு.சங்கர சுப்பிரமணியன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) திரு.சுவாமி முத்தழகன், வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், மாவட்ட கல்வி அலுவலர்(இடைநிலை) திருமதி. நேசபிரபா, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் இரா.முருகேசன், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், மா.அன்பழகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், நகர்மன்ற துணைத் தலைவர் கலியமூர்த்தி, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரிதிநிகள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி நீலமங்கலம் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மற்றும் மாவட்ட ஆட்சியர் எம். எஸ்.பிரசாந்த் கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள் இதில் அரசு அதிகாரிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உட்பட உடன் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் வாணாபுரம் வட்டம் ரிஷிவந்தியம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ் புதல்வன் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் தொடங்கி வைத்து மாணவர்கள் பயன்பெறும் வகையில் வங்கி பரிவர்த்தனை அட்டையினை வழங்கினார். இதில் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மாணவர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



இந்தியாவுக்கே முன் உதாரணமாக தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் கோவையில் மாணவர்கள் பயன்பெறும் வகையில் தமிழ் புதல்வன் என்கிற திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் தமிழ் புதல்வன் திட்டத்தை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்து மாணவர்களுக்கு ரூபாய் ஆயிரம் பெரும் டெபிட் கார்டு அட்டையினை வழங்கினார். இதில் அரசு தொழிற்பயிற்சி நிலைய அலுவலர், இளநிலை பயிற்சி அலுவலர்கள், பயிற்றுநர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்பட பலர் உடன் கலந்து கொண்டனர்.